மறைந்த தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப் படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (10–9–1982) காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை காலை 10,11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. சென்னையிலுள்ள புற்றுநோய் நல நிறுவனத்திற்குச் சொந்தமான TMP. 3382 ஆம் எண் ஸ்டான்டர்டு வண்டி மற்றும் TNO. 8749 ஆம் எண் சிறு பேருந்து இவற்றைப் பொறுத்த வரையில் சலுகை வித வரி செலுத்துவது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 18–5–1982 ஆம் தேதியிடப்பெற்ற 1218 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

91. சென்னையிலுள்ள கால்நடை நல வாரியத்திற்குச் சொந்தமான MSM 4369 ஆம் எண் நடமாடும் கால்நடை மருத்துவ வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத் தக்க வரி வீதத்தைக் குறைப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 14–5-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1177 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

92. செங்கல்பட்டு மாவட்டம் உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள அருணாசலம் பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த மல்லியன் கரணை குக்கிராமத்தை கிராமதான இயக்கக் கிராமமாக அறிவிப்பது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 24-6-1982 ஆம் தேதியிடப் பெற்ற 930 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

93. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டத் தில் சில கிராமங்களைக் கிராமதான இயக்கக் கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 11-7-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1051 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்] [1982 செப்டம்பர் 9

94. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டத்திலுள்ள அளகாபுரி கிராமத்தைச் சேர்ந்த வடகம்பட்டிகுக்கிராமத்தை பூதான இயக்கக் கிராமமாக அறிவிப்பது குறித்து, ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 14-7-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1052 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

95. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம்—அனுமதிச் சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 16-10-1981 ஆம் தேதியிடப் பெற்ற 268 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

96. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு மகளிர், பெண்டிர் விபச்சாரத் தடை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, சமூக நலத் துறையின் 6-8-1981 ஆம் தேதியிடப் பெற்ற 580 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1956 ஆம் ஆண்டு மகளிர் பெண்டிர் விபச்சாரத் தடைச் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 104/1956) 23 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

97. கோயம்புத்தூரிலுள்ள திருவாளர் இராமகிருஷ்ணா மிஷின் வித்தியாலயா பாலிடெக்னிக்கிற்குச் சொந்தமான TMW 1960 ஆம் எண் வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத் தக்க வரிவீதத்திலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து—1) 29-6-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1660 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

98. 1979-80—ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1948 ஆம் ஆண்டு மின்சக்தி வழங்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75 (1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

20. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்தும் 1981-82 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், விவாதத்தைத் தொடங்கி வைத்து மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றும் உரை (தமிழ், ஆங்கிலம்).